கொண்டிருக்கிறது என்பதும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அந்த மாதிரி யான நிலையை மாற்றுவதற்கு தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளாட்சித்துறை, மின்துறை இரண்டையும் இணைத்து விளக்குகள் தேவைகளைப் பற்றி ஆய்வு செய்யவும், தேவையான விளக்குகளை வழங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. வெகு விரைவில் இதுபற்றி அரசு ஒரு அறிக்கையை உள்ளாட்சித்துறை சார்பில் சமர்ப் பிக்கும்.

சென்னையில் கால்நடை மருந்தகங்கள்

90—(*வினா எண் 5464) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் உள்ள கால்நடை மருந்தகங்கள் எவ்வளவு ?

(ஆ) தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரையின்படி அவைகள் அமைந்துள்ளனவா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்னை நகரில் உள்ள கால்நடை நிலையங்கள்:

1) கால்நடை மருத்துவமனை, சைதாப்பேட்டை.

2) கால்நடை மருந்தகம், இராயபுரம்.

3) கால்நடை மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனை, சென்னை.

(ஆ) இல்லை.

திருமதி. பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் பெருகி வரும் கால்நடைகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது இங்குள்ள மருந்தகங்கள் மிகவும் குறைவாக உள்ளன. எனவே அதிகமான கால்நடை மருந்தகங்களை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா ? மேலும் மாநகராட்சி துப்புரவு வண்டிகளில் வேலை செய்கிற கால்நடை களுக்கு அரசு மருத்துவ வசதிகளைச் செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி துப்புரவு வண்டிகளில் கட்டப்படும் எருதுகளின் சிகிச்சைக்காக கீழ்க்கண்ட இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன: (1) கோடம்பாக்கம், (2) மைலாப்பூர், (3) புதுப்பேட்டை, (4) பேசின்பிரிட்ஜ், (5) பெரம்பூர். மேற்கூறிய இடங்களில் பொதுமக்கள் கால் நடைகளை எடுத்துச் சென்றாலும், அவைகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக் குழுவின் பரிந்துரையின்படி ஏன் மருந்தகங்கள் அமைக்கவில்லை? கால்நடை மருந்தகங்களை அமைக்க மத்திய அரசு ஏதேனும் மானியம் அளித்து உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு மானியம் ஒன்றும் அளிக்கவில்லை. வேளாண்மைக் குழு 1980 ஆம் ஆண்டில் 20 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருத்துவரும், அதற்குப் பிற்பாடு 15 ஆயிரம் கால் நடைகளுக்கு ஒரு மருத்துவரும் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். பணம் இல்லாத காரணத்தால் அது அமல்படுத்தப் படவில்லை.

திருமழிசை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைத்தல்.

91—(*வினா எண் 9117) திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா திருமழிசை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 33/11 கே. வி. துணை மின் நிலையம் அமைக்க தேவையான நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கைகளை மின் வாரியம் எடுத்து வருகிறது.

பென்னாகரத்தில் இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள்

92—(*வினா எண் 9649) திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பென்னாகரம் தொகுதியில் எத்தனை இடங்களில் இளம் பட்டுப்புழுவளர்ப்பு மையங்கள் நடைபெற்று வருகின்றன?

(ஆ) நெருப்பூர், ஏரியூர் பெரும்பாளை ஆகிய ஊர்களில் மையங்கள் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பென்னாகரம் தொகுதியில் நெருப்பூர், காட்டூர், ஆணைக்கல்லானூர், சின்னப்பட்டி, பிக்கம்